## யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre
## தவணைப் பரீட்சை, யூலை - 2016
## Term Examination, July - 2016

| தரம் :- 12 (2017) | தமிழ் | நேரம் :- 3.00 மணித்தியாலங்கள் |
| --- | --- | --- |

❖ பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களுக்கும், பகுதி II இல் 'அ' பகுதியில் ஏதாவது ஒரு வினாவுக்கும் 'ஆ' பகுதியில் ஏதாவது ஒரு வினாவுக்குமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி - I

(01) பின்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

(i) ................................ மின்னொடு
வானம் தண்டுளி தலை இ ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லல் பேரயாற்று
நீர்வழிப் படூஉம் புணை போல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

(அ) இச் செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
(ஆ) இச்செய்யுளில் வெளிப்படும் விழுமியக் கருத்துக்களைத் தருக.
(இ) இங்கு கையாளப்பட்டுள்ள அணியை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ii) ஏய வரங்க ளிரண்டி னொன்றி னாலென்
சேயுல காள்வது சீதை கேள்வ னொன்றாற்
போய்வன மாள்வ தெனப்பு கன்று நின்றா
ளியவை யாவை யினுஞ்சி றந்த தீயாள்

நாக மெனுங்கொடி யாட னாவின் வந்த
சோக விடந்தொட ரத்து ணுக்க மெய்தா
வாக மடங்கலும் வெந்த ழிந்த ராவின்
வேக மடங்கிய வேழ மென்ன வீழ்ந்தான்

(அ) இச் செய்யுள்கள் இடம்பெறும் சந்தர்ப்பத்தை விளக்குக.
(ஆ) இப்பாடல்களில் கைகேயியின் பண்பு எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது?
(இ) இங்கு கையாளப்பட்டுள்ள அணிகளை விளக்குக.
(ஈ) "தீயவை யானவையினும் சிறந்த தீயாள்" என்ற தொடரினூடாகப் புலவர் வெளிப்படுத்த விழைவது யாது?

(10 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

(02) (அ) பின்வரும் வினாக்களுக்கு அவற்றின் கீழ் தரப்பட்டுள்ள விடைகளுள் மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்க.

(1) கூட்டுயிர்களாக அமைவன

1) இ, ஈ  2) ஆ, ஓ  3) இ, ஐ
4) ஊ, ஏ  5) ஐ, ஔ

(2) தற்காலத் தமிழில் மொழிக்கு இறுதியில் வராத உயிரெழுத்துக்கள்

1) எ, ஒ, ஔ  2) ஏ, ஐ, ஓ  3) ஐ, ஏ, ஓ
4) ஒ, ஓ, ஔ  5) ஆ, ஐ, ஓ

(3) பின்வருவனவற்றுள் உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாக அமையாதது

1) யாது  2) தெரியாது  3) புரியாது
4) முடியாது  5) விடியாது

(4) பின்வருவனவற்றுள் உடனிலை மெய்ம்மயக்கமாக அமைந்த சொல்

1) தண்ணீர்  2) நன்றி  3) கல்வி
4) தாய்மை  5) பார்வை

(5) கண்டான் என்பதன் பகுதி

1) கண்  2) காண்  3) கண்டு
4) கண்ட  5) காட்சி

(6) 'நேற்று வந்தவள் என் தோழி' என்பதில் வந்தவள் என்பது

1) வினைச்சொல்  2) தொழிற்பெயர்  3) வினையாலணையும் பெய
4) எச்சவினை  5) முற்றுவினை

(7) 'மாணவருக்கு உரியது நல்லொழுக்கம்' என்பதில் 'கு' உணர்த்தும் பொருள்

1) கொடை  2) பகை  3) நட்பு
4) முறை  5) தகுதி

(8) காரண இடுகுறிப் பெயராக அமையும் சொல்

1) பறவை  2) பொன்னன்  3) கடல்
4) முள்ளி  5) சோறு

(9) பின்வருவனவற்றுள் கிரேக்க மொழிச் சொல்லாக அமைவது

1) அட்டவணை  2) அத்தர்  3) துப்பாக்கி
4) சுருங்கை  5) அட்டிகை

(10) மனித வாழ்வில் இன்பமும் துன்பமும் வருவதுண்டு என்பதைக் குறிக்கும் பழமொழி

1) வல்லான் பம்பரம் மணலிலும் ஆடும்
2) ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்
3) இலையும் பழுப்பும் எங்குமுண்டு
4) எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு
5) இட்டுக்கெட்டார் எங்குமில்லை

(10 x 1 = 10 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

(ஆ) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடை தருக.

(i) இடைநிலை மெய்ம்மயக்கத்தின் வகைகளை உதாரணம் தந்து விளக்குக.

(ii) தனிவினை, கூட்டுவினை என்பவற்றைத் தெளிவுபடுத்துக.

(iii) வினாச்சொற்கள் - வினா இடைச்சொற்கள் வேறுபடுத்துக.

(iv) ஐகாரக்குறுக்கம் என்றால் என்ன? உதாரணந் தந்து விளக்குக.

(v) இலக்கணப்போலி என்றால் என்ன? உதாரணத்துடன் விளக்குக.

(5 x 2 =10 புள்ளிகள்)

(03) பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிவு செய்து 300 – 350 சொற்களில் கட்டுரை எழுதுக.

(அ) நவீன கல்வியும் தொடர்பாடற் சாதனங்களும்

(ஆ) மனித வாழ்வில் சமயத்தின் வகிபாகம்

(இ) இலக்கியமும் பண்பாடும்

(ஈ) பேராசிரியர் வி. செல்வநாயகத்தின் தமிழ்ப்பணிகள்

(உ) யாதும் ஊரே யாவரும் கேளிர்

(20 புள்ளிகள்)

agaram.lk

## பகுதி II - "அ"

(04) (அ) வினைத்திட்பம் என்ற அதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டு வினைத்திட்பம் என்பதன் மூலம் வள்ளுவர் எதனைக் கருதினார் என்பதைத் தெளிவுபடுத்துக.

(ஆ) வினைத்திட்டத்தின் அருமை, சிறப்பு, பயன் என்பன பற்றி வள்ளுவர் கூறியவற்றை விளக்குக.

(இ) வினைத்திட்பம் இல்லாதோரின் இழிவு பற்றி யாது கூறப்படுகின்றது?

(ஈ) இவ்வதிகாரத்தில் காணப்படும் உவமைகளை எடுத்துக்காட்டி அவை கையாளப்பட்ட நோக்கங்களை விளக்குக.

(20 புள்ளிகள்)

5) **கைகேயி சூழ்வினைப் படலத்தில் தசரத மன்னன் கைகேயியின் காலில் விழுந்தது முதல் அவள் கூறிய கடுஞ்சொற்களைக் கேட்டுக் கலங்கியது வரையுள்ள பகுதியில்**

(அ) தசரதன் கைகேயியிடம் இரந்தவை

(ஆ) கைகேயி கூறியவை

(இ) கம்பனால் கையாளப்பட்ட அணிகள் என்பனவற்றைத் தெளிவுபடுத்துக.

(20 புள்ளிகள்)



Scanned with CamScanner

6) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

(அ) "சீர்ப்பதம்" பதிகத்தில் சிவபெருமானின் பெருமைகள்

(ஆ) குழந்தை இயேசு, சூசை, மரியாள் ஆகியோர் நகரை விட்டு நீங்கிச் செல்லும்போது அவர்களுக்கு ஏற்பட்ட அவலங்கள்

(இ) டார்வினின் வாதத்துக்கும் புராண இலக்கியங்களுக்கும் இடையிலான தொடர்பு

(20 புள்ளிகள்)

## பகுதி II - "ஆ"

7) (அ) பல்லவர்கால பக்திசாரா இலக்கியங்களின் பண்புகளைத் துலக்குக.

(ஆ) பல்லவர்காலப் பக்தி இலக்கியங்கள் சோழப்பெருமன்னர் காலத்துக் காவியங்களில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன?

(20 புள்ளிகள்)

8) (அ) ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த இலக்கியங்களை வகைப்படுத்துக.

(ஆ) "ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் தலபுராண மரபின் உச்சக்காலமாகும்" ஆய்க.

(20 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூலை - 2016
## Term Examination, July - 2016

| தமிழ் | புள்ளித்திட்டம் | தரம் :- 12 (2017) |
|---|---|---|

### பகுதி - I

1) i) அ) மின்னலுடன் வானம் குளிர்ந்த நீரைப்பெய்வதுடன் கல்லை அலைத்து ஒலி எழுப்பி, பெரிய ஆறாகப் பெருக்கெடுத்து ஓடும்போது நீர் செல்லும் திசையிலே செல்லுகின்ற தெப்பம் போல அரிய உயிரானது விதியின் வழியே செல்லும் என்பதை கற்றுத் தெளிந்த அறிஞர்களின் நூல்களினால் அறிந்து கொண்டோம். ஆகவே பெருமைக்குரியவரைக் கண்டு வியக்கவும் மாட்டோம். சிறியவர்களைக் கண்டு பழிக்கவும் மாட்டோம்.

(4 புள்ளிகள்)

ஆ) ★ ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் விதிப்படியே அமையும்
★ நல்ல நூல்களைக் கற்றலும் அதன்படி ஒழுகுதலும்
★ பெரியவர்களைக் கண்டு வியத்தல் ஆகாது
★ சிறியவர்களைப் பழித்தல் ஆகாது

(3 புள்ளிகள்)

இ) உவமை அணி கையாளப்பட்டுள்ளது. உவமானம் - நீர்வழிப்படூஉம் புணை
உவமேயம் - விதி வழியே செல்லும் ஆருயிர் பொதுத்தன்மை - அழைக்கும் வழியே செல்லுதல்

ii) அ) கைகேயி தான் பெற விரும்பிய வரங்களைக்கேட்டபோது, அவற்றைக்கேட்டுத் தசரத மன்னன் மிகவும் வருந்திய சந்தர்ப்பத்தில் இப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

(2 புள்ளிகள்)

ஆ) தீயவை யாவையினும் சிறந்த தீயாள் ...
நாகமெனுங் கொடியாள் ...
என்ற தொடர்களூடாக கைகேயி மிகவும் கெட்டவள் என்பதும் மிகவும் கொடியவள் என்பதும் விளக்கப்படுகின்றது.

(3 புள்ளிகள்)

இ) உவமையணி
உவமானம் - அராவின் வேகம் அடங்கி வீழ்ந்த வேழம்
உவமேயம் - கொடியாள் நாவின் ஈந்த சோக விடத்தினால் வீழ்ந்த தசரதன்
பொதுத்தன்மை - ஆற்றல் குறைந்த வற்றால் ஆற்றல் கூடியன அழிதல்

**வேற்றுமையணி**

நாகமெனும் கொடியாள் தன் நாவின் ஈந்தசோகவிடம் தொடர என்ற தொடரில் பாம்பு, பல்லில் உள்ள நஞ்சினால் பிறரைக் கொல்லும் தன்மையுடையது என்பது விளக்கப்படுகின்றது. கைகேயி தன் நாவில் உள்ள நஞ்சினைப் போன்ற சொற்களால் தசரதனை மண்ணில் வீழச் செய்தாள் என்று கூறப்படுகின்றது

(3 புள்ளிகள்)

ஈ) கைகேயியின் கொடூரத்தன்மை

(2 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

2) அ)

1) - ஐ ஔ

2) - எ, ஓ, ஔ

3) - யாது

4) - தண்ணீர்

5) - காண்

6) - வினையாலணையும் பெயர்

7) - தகுதி

8) - முள்ளி

9) - சுருங்கை

10) - இலையும் பழுப்பம் அங்கும் உண்டு

(10 X 1 = 10 புள்ளிகள்)

ஆ) (i) சொற்களிடையே இரு மெய்யெழுத்துக்கள் அடுத்தடுத்து வருவது இடைநிலை மெய்மயக்கம் எனப்படும். இது இரு வகைப்படும்.

1. உடனிலை மெய்மயக்கம் சொற்களுக்கிடையே ஒரே மெய்யெழுத்து இரட்டித்து வருவது உடனிலை மெய்மயக்கம் எனப்படும்
(உதாரணம்) (க், க்) வெற்றி (ற் றி)
2. வேற்றுநிலை மெய்மயக்கம்
சொற்களுக்கிடையே, ஒரு மெய் வேறு மெய்களுடன் இணைந்து வருவது வேற்று நிலை மெய்ம்மயக்கம் எனப்படும்.
(உதாரணம்) அன்பு (ன், ப.) சங்கு (ங் க்)

(ii) அடிச்சொல் ஒன்றினைப் பகுதியாகக் கொண்டு அமைக்கப்படும் வினை தன்வினை எனப்படும்.

உதாரணம் வா - வந்தான் உண் - உண்டான்

ஒற்றுக்கு மேற்பட்ட அடிச்சொற்கள் சேர்ந்து அமைக்கப்படும் வினை கூட்டு வினை எனப்படும்.

உதாரணம் காண் + பிடி - கண்டுபிடித்தான்

வா + இரு - வந்திருந்தான்

(iii) எது, எப்படி, எங்கே போன்ற வினாச் சொற்களாகும்.
தலைவரா, படிக்கிறீரகளோ என்னும் வினாத்தொடர்களில் வரும் ஆ, ஓ என்பன வினா இடைச்சொற்களாகும்.

(iv) சொல்லின் முதலிலோ, இடையிலோ, ஈற்றிலோ வரும் ஐகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து ஒரு மாத்திரையாகக் குறைந்து ஒலிப்பது ஐகாரக்குறுக்கம் எனப்படும்.
உதாரணம் ஐயர், கலைஞர், பனை

(v) இலக்கண நெறிமுறை இல்லையாயினும் இலக்கணமுடையதுபோல், தொன்றுதொட்டு வழங்கப்பட்டு வரும் சொற்கள் இலக்கணப்போலி எனப்படும்.

உதாரணம் - இல்முன் - முன்றில்

நகர்ப்புறம் - புறநகர்

(5 x 2 = 10 புள்ளிகள்)

agaram.lk

Scanned with CamScanner

3) கட்டுரை

| | | |
|---|---|---|
| பொருட் பொருத்தம் | 10 | புள்ளிகள் |
| மொழிச்செம்மை | 05 | புள்ளிகள் |
| பந்தி, குறியீடு, நேர்த்தி | 03 | புள்ளிகள் |
| முழுமை | 02 | புள்ளிகள் |
| | 20 | புள்ளிகள் |

## பகுதி II – "அ"

4) அ) ஒரு செயலைச் செய்யும்போது வலிமை என்று சொல்லப்படுவது அதனைச் செய்பவனுடைய மனத்தினது உறுதியாகும். இது தவிர்ந்த எல்லாம் அதற்குத் திண்மை என்று சொல்லப்படா என்று வினைத்திட்டத்தை வரையறுக்கின்றார் வள்ளுவர். இதனையே வினைத்திட்பம் என்ப …. என்னும் குறள் மூலம் விளக்கியுள்ளார். (3 புள்ளிகள்)

ஆ) வினைத்திட்பத்தின் அருமை - சொல்லுதல் யார்க்கும் …
வினைத்திட்பத்தின் சிறப்பு - வீறெய்தி மாண்டார் …
வினைத்திட்பத்தின் பயன் - எண்ணிய எண்ணியாங்கு … (9 புள்ளிகள்)

இ) வினைத்திட்பம் இல்லாதோரின் இழிவுஎனைத் திட்பம் எய்திய … (3 புள்ளிகள்)

ஈ) வள்ளுவர் இவ்வதிகாரத்திலே உருவு கண்டு எள்ளாமை வேண்டும் உருள் பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து
என்ற குறளிலே உவமையணியைப் கையாண்டுள்ளார்.
உவமானம் - உருள் பெருந்தேர்க்கு அச்சாணி
உவமேயம் - உருவத்தால் சிறியவர்கள்
பொதுத்தன்மை - ஒரு செயலைச் செய்வதில் பிரதான பங்கு வகிப்பது
உவமை கையாளப்பட்டதன் நோக்கம் பெரிய தேரைச் செலுத்துவதற்கு மிகச்சிறிய அச்சாணியே பிரதானமாகும். அது போலவே ஒருவர் தோற்றத்தில் மிகச்சிறியவராக இருந்தாலும் செயலைச் செய்வதிலே மிகத் திறமையானவராக இருப்பார் என்பதை மிகத் தெளிவாக விளக்குவதற்காக வள்ளுவர் இவ்வுவமையைக் கையாண்டார்

(5 புள்ளிகள்)

5) அ) 30, 31, 32, 33, 36, 37 ஆம் பாடல்களை ஆதாரம்காட்டி விளக்கப்பட்டிருத்தல்

* கொள்ளா னின் சேய் ……. என்ற பாடல் மூலம் இராமனுக்கு முடிசூடி இந்த உலகமே பாராட்டிப் பேசும் புகழை விடுத்து பரதனை முடிசூடச் செய்து எல்லோரும் இகழ்ந்து பேசும் பழிச்சொல்லுக்கு ஆளாகாதே என்று இரந்து வேண்டுகின்றான்.
* வானோர் கொள்ளார் … என்ற பாடல் மூலம் பரதனுக்கு இராமனே தானாக முன்வந்து ஆட்சிப் பொறுப்பைக் கொடுப்பான். ஆகவே இராமனைக் காட்டுக்கு அனுப்ப வேண்டாம் என்று இரக்கின்றான்.
* கண்ணே வேண்டும் … என்ற பாடல் மூலம் என் கண்களையும் உயிரையும் வேண்டு மானாலும் உனக்குத் தருவேன். ஆனால் இராமனைக் காட்டுக்கு அனுப்புவதை மறந்துவிடு என்று இரக்கின்றான்.



agaram.lk
Scanned with CamScanner

* வாய் தந்தேன் என்றேன்.. என்ற பாடல் மூலம் பேய்கூட இரங்கும் இராமனுக்குத் தாயாகிய நீ இரங்க மாட்டாயா? என்று வேண்டுகின்றான்.
* நின் மகனாள்வான் ... என்ற பாடல் மூலம் என் கண்ணாகவும் உயிராகவும் விளங்கும் இராமனைக் காட்டுக்கு அனுப்பாதே என்று இரந்து கேட்கின்றான்.
* மெய்யே என்றன் ... என்ற பாடல் மூலம் என் மகன் என்னை விட்டுப் பிரிவானேல் நான் உயிர் வாழ மாட்டேன். இப்போது என் உயிர் உன்னிடமே தஞ்சம் என்று இரந்து வேண்டுகின்றான். (10 புள்ளிகள்)

ஆ) 34, 38 ஆம் பாடல்களை ஆதாரங்காட்டி விளக்குதல் -

அரசர்களுக்கும் அரசனான தசரதச் சக்கரவர்த்தி கைகேயியின் காலில் விழுந்து இரந்து வேண்டியவற்றைக் கேட்ட கைகேயி தனது மனநிலையில் ஒரு சிறிதும் மாற்றமில்லாதவளாக முன்னே தந்தாய் இவ்வரம் நல்காய் ... என்றும்

தந்த வரதத்தைத் தவிர்க்க என்றல் உரந்தான் அல்லாமல் நல்லறமாமோ என்றும் வினாவுவதன் மூலம் தனது கொடூரமான சிந்தையை வெளிப்படுத்துகின்றாள்.

(5 புள்ளிகள்)

இ) இப்பகுதியில் கம்பனால் கையாளப்பட்டுள்ள அணிகள் மிகவும் பொருத்தப்பாடு உடையனவாகக் காணப்படுகின்றன.

தாய் தந்தென்ன, தன்னை யிரந்தாள் தழல் வெங்கட்
பேய்தந் தீயு நீயிது தந்தாற் பிழையாமோ

என்ற அடிகளில் உவமையணி கையாளப்பட்டுள்ளது. இங்கு இராமனைக் காட்டுக்கு அனுப்பும்படி கேட்ட வரத்தை மறக்கும்படி தசரதன் கைகேயியை வேண்டுவது உவமை மூலம் எடுத்துக் காட்டப்படுகின்றது.

(5 புள்ளிகள்)

6) அ) ★ திரியம்புரம் நீறாக்கிய ....
★ செல்லலுற அரியசிவன் ....
என்னும் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குதல்

(10 புள்ளிகள்)

ஆ) ★ வார் வளர் ... என்ற பாடலினூடாக அந்நகர் செத்த உடம்பு போல் காணப்பட்டமை கூறப்படுகின்றது
★ நல்வினை உலர்ந்த ..., இருள்புரி நாப்பண்.... என்ற பாடல்கள் மூலம் அந்நகரின் நலங்கள் யாவும் நீங்குதல் கூறப்படுகின்றது.
★ அலை புறங்கொண்ட ... என்ற பாடலில் அந்நகரில் பாவம் மலிந்து இருள் சூழ்ந்து காணப்பட்டமை கூறப்படுகின்றது.
★ கதிதள்ளி யுயர்வான் ... என்ற பாடலினூடாக தீயவை யாவும் அந்நகரைச் சூழ்ந்து கொண்டமை கூறப்படுகின்றது
★ பணி வளர் நகரும் ... என்ற பாடலினூடாக அந்நகர் நடுங்குமாறு துன்பம் வாட்டி வதைத்தமை கூறப்படுகின்றது.

(10 புள்ளிகள்)

இ) மண்டனக் காயிர கோடி அண்டங்களுள் வாகும் ... கந்தபுராணம்
கர்ண பரம்பரைக் கதைகள்
பண்டைய இந்திய இலக்கியங்கள்
புராண, இதிகாசங்களில் வரும் வருணனைகள் என்பவற்றை ஆதாரங்களாகக்காட்டி விளக்குதல்

(10 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

7) அ) அகப்பொருள், புறப்பொருள் பற்றிப் பாடுவன

தமிழும் வடமொழியும் கலந்த மணிப்பிரவாளநடை

மொழிச் செல்வாக்கின் அதிகரிப்பு

வெண்பா, விருத்தப்பா, அகவற்பா, கட்டளைக் கலித்துறை போன்ற யாப்பு வடிவங்களின் பயன்பாடு

கலம்பகம், கோவை முதலான இலக்கியங்கள் கையாளப்பட்டமை.

(9 புள்ளிகள்)

ஆ) பல்லவர் காலப் பக்தியின் தொடர்ச்சியான வளர்ச்சியே சோழர்காலக் காவியங்களின் எழுச்சிக்குக் காரணமாகும்.

சைவ சித்தாந்த, வைணவ தத்துவக் கருத்துக்கள் காவியங்களில் இடம்பெற்றிருத்தல்

பல்லவர்காலப் பக்தியிலக்கியங்களில் கையாளப்பட்ட விருத்தப்பா சோழர்காலக் காவியங்களில் கையாளப்பட்டமை

பல்லவர்காலப் பக்தி இலக்கியங்களில் இறைவனும் இறையடியார்களும் பாட்டுடைத் தலைவராகப் போற்றப்பட்டமையைத் தொடர்ந்து சோழர்காலக் காவியங்களில் அரசர்களும் பொதுமக்களும் பாட்டுடைத்தலைவராகக் கொள்ளப்பட்டமை

(11 புள்ளிகள்)

அ) சோதிட நூல்கள்

1. சரசோதிமாலை
2. செகராசசேகரமாலை

} சோதிட நூல்கள் } அறிவியற் சார்புடையவை

3. செகராச சேகரம்
4. பரராச சேகரம்

} வைத்திய நூல்கள் } அறிவியற் சார்புடையவை

5. வையா பாடல்
6. கைலாயமாலை
7. கோணேசர் கல்வெட்டு

} வரலாற்று நூல்கள்

8. தடசிண கைலாசபுராணம்
9. திருக்கரசைப் புராணம்

} தலபுராணங்கள்

10. இரகுவம்சம் - மொழிபெயர்ப்பு

11. கதிரை மலைப்பள்ளு
12. கண்ணகி வழக்குரை

} பொது மக்கள் சார்பு இலக்கியங்கள்

(10 புள்ளிகள்)

ஆ) ★ பல்வேறு தலபுராணங்கள் தோற்றம் பெற்றமை

★ தட்சிண கைலாய புராணம், திருக்கரசைப்புராணம்

★ வடமொழி தழுவிய தலபுராணங்கள்

உள்ளூர் சார்ந்த தலபுராணங்கள்

(10 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner